மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஊராட்சி ஒன்றியங்களில் கிராமங்களுக்கான குடிநீர் வசதி போன்ற திட்டங்களை எல்லாம் நிறைவேற்றும் பணிகள் இந்த நூற்றாண்டு விழாவை யொட்டி நடைபெறுகிற காரியங்களாகும்.

திரு. டி. சந்தோஷம் : மகாத்மாஜி அவர்கள் சத்தியம் வளரப் பாடு பட்டார்கள். இப்போது மதுவிலக்கின் அடிப்படையில் அசத்தியம் பெருகி வருவதால் இந்த நூற்றாண்டுவிழாக் காலத்தில் அந்த மதுவிலக்கைப் பற்றி மறு பரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அப்படியே மறுபரிசீலனை செய்வதாக இருந்தாலும் மகாத்மாவின் நூற்றாண்டு விழாக் காலம் அதற்குரிய காலமாக இருக்க வேண்டாமென்று அரசு கருதுகிறது.

Sale of Kerala and Orissa Government Lottery Tickets

*337. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Finance be pleased to state :

(*a*) whether the sales of Kerala and Orissa Government lottery tickets are banned in Tamil Nadu;

(*b*) if so, whether it has been brought to the notice of the Government that these lottery tickets are sold in Tamil Nadu in spite of the order; and

(*c*) if so, the action taken thereon?

கேரளா, ஒரிசா பரிசுச் சீட்டுகள் விற்பனை.

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் —

(அ) கேரளா, ஒரிசா பரிசுச் சீட்டுகள் தமிழகத்தில் விற்கப்படுவது தடை செய்யப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், இத்தடையை மீறி இப்பரிசுச் சீட்டுகள் தமிழகத்தில் விற்கப்படுவது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதா ?

(உ) ஆமெனில் அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) இல்லை.

(இ), அண்டு (உ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

Stock of Fertilisers

*338. *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) the value of the stock of fertilisers as on 1st January 1966 in (i) Government Godowns; and (ii) Co-operative Department Godowns;

(*b*) whether it is a fact that fertilisers have not been sold much due to the lack of interest on the part of the Co-operative Department in the sale of fertilisers; and

(*c*) whether the Government will take steps to make fertilisers available in plenty through private dealers?

ரசாயன உரவகைகள்இருப்பு

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1966 ஜனவரி 1ஆம் தேதிய நிலவரப்படி தமிழகத்தில் (1) சர்க்கார் கிடங்குகளிலும், (2) கூட்டுறவு இலாகா கிடங்குகளிலும் மொத்தம் எத்தனை ரூபாய் மதிப்புள்ள ரசாயன உரவகைகள் இருப்பு இருந்தன ?

(இ) ரசாயன உரவகைகளை விற்பதில் கூட்டுறவு இலாகா அதிக சிரத்தை காட்டாத காரணத்தால் ரசாயன உரம் விற்பனையாகவில்லை என்பது உண்மையா ?

(உ) தனியார் மூலம் உரம் தாராளமாகக் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) மாநிலத்தில் உள்ள அரசுக் கிடங்குகளிலும், கூட்டுறவுக் கிடங்குகளிலும் 1966-ம் வருடம் ஜனவரி மாதம் 1-ம் தேதி அன்றைய நிலவரப்படி ரூ. 1,91,25,384·83 காசு (ஒரு கோடியே தொண்ணூற்றேரு லட்சத்து இருபத்தைந்தாயிரத்து முன் னூற்று எண்பத்தி நான்கு ரூபாய் எண்பத்தி மூன்று காசு) மொத்த மதிப்புள்ள ரசாயன உரங்கள் இருப்பில் இருந்தன.

(இ) இல்லை.

(உ) 1964-ம் ஆண்டு முதல் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கோயம் புத்தூர், செங்கற்பட்டு ஆகிய தெரிந்தெடுக்கப்பட்ட நான்கு மாவட்டங்களில் சில்லறை நிலையில் ரசாயன உரங்களைக் கூட்டுறவுகளுடன் சேர்ந்து விற்பனை செய்யத் தனியாருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. உர சேமிப்பு இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன் சில்லறை நிலையில் உரங்களைப் பங்கிடும் வாணிபத்தில் தனியார் வணிகர்களைச் சேர்த்துக் கொள்ளவும், 1968 நவம்பரில் பிற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. அதன் மூலம் இம்மாநிலத்தின் எல்லாப் பகுதிகளிலும் உரங்களைப் பயன்படுத்தும் உழவர்களுக்கு உரங்கள் எளிதில் கிடைக்க வழி ஏற்படும். மேலும், கூட்டுறவுச் சங்கங்களின் முயற்சிகளுக்கும் இம்முறை துணை புரியும். ரசாயன உரங்களை வழங்கல் குறித்த அமைப்பில் தனியார் வாணிகத்தை இணைப்பது முன்னேடி நடவடிக்கையாகவே தொடர்ந்து மேற்கொள்ளப்படுகிறது.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கங்கள் உரத்தை விற்பனை செய்வதில் அவ்வளவு சிரத்தை காட்டவில்லை என்று கேள்வியில் இருக்கிறது. நான் ஒரு கூட்டுறவு மார்க்கெட்டிங் சொஸைட்டியினுடைய தலைவர். என்னுடைய முழு பிரயாசையுடன் மூன்று மாதங்களாக எவ்வளவோ முயற்சிகள் எடுத்தும் எந்தவிதமான பலனும் கிடைக்கவில்லை. கிட்டத்தட்ட ரூ. 6 லட்சம் பெறுமான உரங்கள் தேங்கியிருக்கின்றன. கூட்டுறவு செண்ட்ரல் பாங்கில் வாங்கிய பணத்திற் காக அதைக் கொடுக்க முடியாமல் வட்டி கொடுக்கிற துர்பாக்கிய நிலையில் இருக்கிறோம். ஏற்படும் வட்டி நஷ்டத்தினலேயே அந்த சொசைடி பூராவும் நசிந்து போகிற நிலைமை இருப்பதால் வட்டி நஷ்டத்திற்கு ஏதாவது வழி வகை செய்யவேண்டும். உரங்களை கிரடிட்டுக்கு எடுத்து ஸ்டாக் செய்துவிட்டோம். பணத்திற்கு அரசாங்கம் தவணை நீட்டிக் கொடுப்பதாகத் தெரிகிறது. ஆனல் வட்டி நஷ்டம் ஏற்படாமல் இருக்க ஏதாவது வழி வகை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கூட்டுறவு இயக்கம் மூலமாக உரங்கள் வழங்குவது எல்லா இடங்களிலும் நல்லமுறையில் நடக்க வில்லை என்று அரசு கருதவில்லை. சில இடங்களில் நல்லமுறையில் நடக்கிறது. சில இடங்களில் கஷ்டம் ஏற்படலாம். அதில் தனி அக்கறை காட்டுவது நல்லதுதான். வட்டி தள்ளுவதைப் பற்றி கேட்டார் கள். தமிழக அரசு 23 கோடி பெறுமான உரத்தை வைத்துக் கொண்டிருக்கிறது. தேங்கியிருக்கிறது. அதற்கு மாதம் ஒன்றுக்கு

[31st March 1969

வட்டி மட்டும் 35 ஆயிரம் கட்ட வேண்டியிருக்கிறது. ஏற்கெனவே வந்திருக்கிற உரம் தேங்கியிருக்கின்ற சூழ்நிலை ஏற்பட்டு 6 லட்சம் பெறுமான உரம் இருக்கிறது என்றால், அரசுக்கு 23 கோடி ரூபாய் பெறுமான உரம் இருக்கிறது. மாதம் ஒன்றுக்கு 35 ஆயிரம் என்றால் ஆண்டுக்கு 4,20,000 வட்டி கட்டவேண்டியிருக்கிறது. Pool Price increase ஆனதன் விளைவாக ரூ. 2½ கோடி கூடுதலாகக் கொடுக்க வேண்டியிருக்கிறது. அதற்கு சலுகை பெறவேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்திக் கேட்டதில் ஏற்கெனவே கூட்டுறவு இயக்கத்திலிருந்த Wholesale retail, டீலர்கள் பழைய விலையில் விற்பதற்கு மத்திய உணவு அமைச்சர் அனுமதி வழங்கினார். அதை எல்லா கூட்டுறவுச் சங்கங்களும் கடைப்பிடிக்க வற்புறுத்துகிறோம். மத்திய அரசு தெரிவிக்கிற சலுகை இது. மத்திய அரசு வட்டி கேட்பதை நிறுத்திக் கொண்டால் நாமும் கேட்காமல் விட்டுவிடலாம்.

திரு. என். சுந்தரேசத் தேவர் :—வினியோகம் செய்யும் நேரத்தில் முன்பு தட்டுப்பாடு இருந்ததால் அப்படி கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டது. இப்போது தாராளமாகக் கிடைக்கும் நேரத்தில் தனியார் அதை வினியோகிக்கவும் அதன் லாப நஷ்டங்களை அவர்கள் ஏற்கவும் ஏற்ற முறையில் அரசாங்கம் அதை நடத்த முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :—கூட்டுறவு சங்கங்கள் எங்கெங்கு சரியான முறையில் நடக்கின்றனவோ அங்கெல்லாம் அவைகளின் மூலமாக வழங்கினோம். கூட்டுறவு முறை சரியாக நடக்காத இடங்களில் தனியாருக்கும் கொடுக்கிறோம். நான் குறிப்பிட்ட நான்கு மாவட்டங்களில்தான் கூட்டுறவு மூலம் வழங்கப்பட்டது. மற்ற மாவட்டங்களில் தனியாருக்குத்தான் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த சூழ்நிலையில் எந்த கூட்டுறவு சங்கமும் சரியாக நடக்கவில்லை என்றால் அதை மாற்றலாம். கூட்டுறவு சங்கங்களில் இருக்கிறவர்களுக்கு வேண்டாம் எங்களுக்கே கொடுக்கவேண்டும் என்று கேட்கிறார்கள். கனம் ஜெயராம ரெட்டியார் அவர்கள் கூட்டுறவில் வேண்டாம் என்கிறார். அவர் கட்சியைச் சேர்ந்தவரே கேட்பதால் அதை அவரிடமிருந்தே தெரிந்து கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

Forest Lands

* 339. Q.—Thiru N. SUNDARESA THEVAR: Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state whether there is any scheme under the consideration of the Government to cultivate the lands of Forest Deparment, under Co-operative Agricultural Farm Scheme, suitable for Agricultural purposes, in order to increase the food production?

காட்டிலாக்கா நிலங்கள்

திரு. என். சுந்தரேசத் தேவர் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.

உணவு உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு விவசாயத்திற்கு ஏயக்கான காட்டிலாகா நிலத்தை கூட்டுறவு விவசாய பண்ணைத்திட்டத்தின் கீழ் சாகுபடிக்கு கொண்டுவரும் திட்டம் தமிழக அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இத்திட்டம் ரெவின்யூ போர்டின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். சுந்தரேசத் தேவர் : பட்டுக்கோட்டை வட்டாரத்தில் இரண்டாயிரம் ஏக்கருக்கு மேல் காடுகளாக இல்லை, சாகுபடிக்கு பயன்படத்தக்க நிலங்களாக இருக்கின்றன. அவை தரிசாகக் கிடக்கின்றன. அவற்றை ஏழைகளுக்குப் பகிர்ந்து கொடுத்தால் உணவு உற்பத்திக்குப் பயன்படும். அதைச் செய்வதற்கு அரசாங்கம் பரிசீலிக்குமா ?